**ஜனவரி - 7**

**"ஒருவனையும் தூஷியாதிருங்கள்." - தீத்து 8:2**

அவதூறும், தூஷணமும் மற்றவருடைய குணத்தைக் கொலை செய்வதாகும் என்றும், அபவாதம் மற்றவருடைய புகழை களவு செய்வதாகும் என்றுமுள்ள சரியான கருத்தை ஒருமுறை சிலுவையின் போர்சேவகர் கண்டுகொண்டார்களானால், கர்த்தருடைய பார்வையில் தோன்றுகிறது போல, சீக்கிரத்தில் இந்த விஷயத்தை உண்மையாகவே பயபக்தியுண்டாக்கும் வெளிச்சத்தில் காண்பார்கள். ஒருமுறை தெய்வீக நோக்கின்படி இந்த விஷயத்தைப் பார்ப்பார்களானால், அது புது இருதயத்தையும், புது மனதையும், புது சித்தத்தையும், மாம்சத்தின் கிரியைகளையும், பிசாசின் கிரியைகளையும் வெல்லக் கூடுமான அளவுக்கு இதைவிட மிக அதிகமாக செயல்பட விழிப்படையச் செய்யும். கர்த்தரைப் போலாவதற்கும், இருதயத்தில் சுத்தமாயிருப்பதற்கும், பழைய புளித்தமாவாகிய துர்குணம், பொறாமை, சண்டை, நேர்மையற்ற குணம், தூஷணம் ஆகிய இவைகளைக் களைந்துபோட ஒவ்வொருவரும் நாடுவோமாக. **- Z ’03, 425 (R 3272).**

நம்மில் ஒவ்வொருவருக்கும் அநேக குறைகள் இருக்கின்றன. மற்றவர்களுக்கு அநேக நல்ல குணங்கள் உண்டு. ஆகையால் நம்மில் யாராவது மற்ற யாரையாவது தூஷித்தால், அது தகாததாகும். மற்றவர்களுடைய வீட்டுத்தரையை பெருக்கிச் சுத்தம் செய்ய முயற்சி செய்வதற்கு முன்பு, நம்முடைய வீட்டுத்தரை நன்றாகப் பெருக்கிச் சுத்தம் செய்யப்பட வேண்டும். இப்படி நம்மிடமுள்ள குற்றங்களை நீக்குவது மற்றவர்கள் மேல் இரக்கம் காட்ட நமக்கு உதவி செய்யும். அதற்கு பிறகுதான் மற்றவர்களின் தவறான காரியங்களை அவசியமானால் தங்கபிரமானத்திற்கு உற்பட்டு நாம் சொல்லலாம். அதாவது மற்றவர்களது தவறுகளை, அவற்றை சொல்லாவிட்டால் பெரிய கெடுதி நிகழ்ந்துவிடும் என்ற ஒரு நிலை இருந்தால்மட்டும், அப்படி கெடுதி நிகழ்வதை தடுப்பதற்காய் சொல்லலாம்.**-P ’31, 191.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 22:28; சங் 10:7,8; 34:13; 41:5-9; 64:2-5; நீதி 4:24; 10:11,19,31,32;12:5,6,13,17-19; 15:1,4,28; 16:27,28; 26:20-23,28; பிர 10:11,20; ஏசா 32:6,7; மத் 12:34-37; எபே 4:25,29,31; யாக் 3:5-10; 4:11.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 264 (R 5528).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் நலமானதைப் பேசினேனா? அல்லது தீங்கானதைப் பேசினேனா? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? இடையூறுகள் எவை? பலன் என்ன?**